**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 147/2024**

**ம.சா. 1**

நாள்: 17.07.2025

2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜீவா | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் 1 ம் மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 16.04.2023 | வா.சா.ஆ.1 | விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2) | 16.04.2023 | வா.சா.ஆ.2 | இறந்து போன என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 3) | 25.04.2023 | வா.சா.ஆ.3 | என் கணவரின் இறப்பு சான்றிதழ் | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 4) | 03.05.2023 | வா.சா.ஆ.4 | என் கணவரின் வாரிசு சான்றிதழ் | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 5) | 19.06.2012 | வா.சா.ஆ.5 | என் கணவரின் மீனவர் அடையாள அட்டை | ஜெராக்ஸ் நகல் |
| 6) | 15.10.2020 | வா.சா.ஆ.6 | 1ம் எதிர் மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் உரிமம் | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 7) | 22.01.2020 | வா.சா.ஆ.7 | 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் பதிவு எண் TN 65 AK 8718 Bolero நான்கு சக்கர வாகனத்தின் பதிவு சான்று அட்டை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8) | 04.03.2011 | வா.சா.ஆ.8 | 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 9) | 03.08.2012 | வா.சா.ஆ.9 | TN 65 P 9718 வாகனத்தின் பதிவு சான்று அட்டை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 10) | 06.01.2023 | வா.சா.ஆ.10 | TN 65 AK 8718 வாகனத்தின் காப்பீட்டு சான்று | ஜெராக்ஸ் நகல் |
| 11) | 08.01.2023 | வா.சா.ஆ.11 | TN 65 P 9718 வாகனத்தின் காப்பீட்டு சான்று | ஜெராக்ஸ் நகல் |
| 12) | – | வா.சா.ஆ.12 | மனுதாரர்களின் ஆதார் அட்டை – 6 எண்ணிக்கை | ஜெராக்ஸ் நகல் |
| 13) | – | வா.சா.ஆ.13 | என் கணவரின் ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் |
| 14) | 16.04.2023 | வா.சா.ஆ.14 | விபத்து சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட வரைபடம் | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 15) | 16.04.2023 | வா.சா.ஆ.15 | விபத்து சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட பார்வை மகசர் | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 16) | 20.04.2023 | வா.சா.ஆ.16 | TN 65 AK 8718 வாகனத்தின் விபத்து ஆய்வு அறிக்கை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 17) | 24.04.2023 | வா.சா.ஆ.17 | TN 65 P 9718 வாகனத்தின் விபத்து ஆய்வு அறிக்கை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 18) | 15.04.2023 | வா.சா.ஆ.18 | எனது கணவரின் விபத்து பதிவேடு | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |
| 19) | 16.05.2023 | வா.சா.ஆ.19 | விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை | வலைதளத்–திலிருந்து பதிவிறக்கம் செய்து எடுக்கப்பட்ட நகல் |

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் இந்த விபத்தை நேரடியாக பார்த்து வந்தேன். விபத்து சமயத்தில் என் கணவருக்கு 42 வயது. என் கணவரின் வருமானத்தை காண்பிப்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மாமனார் மற்றும் மாமியார் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் எங்களுடன் தான் இருக்கிறார்கள். என் கணவர் பயணம் செய்த TATA Ace வாகனம் பயனியர் வாகனம் இல்லை என்றாலும் அது சரக்கு ஏற்றும் வாகனம் என்றாலும் சரிதான்.

விபத்து சமயத்தில் TATA Ace வாகனத்தில் 5 நபர்கள் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் தனுஷ்கோடிக்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலை ஆகும். மேற்படி விபத்து நடந்த இடம் வலைவான பகுதி என்றால் சரிதான். என் கணவர் பயணம் செய்த TATA Ace வாகனத்தை ஓட்டிய நபருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அந்த வாகனத்திற்கு முறையான அனுமதி சான்றிதழ் மற்றும் தகுதி சான்றிதழ் கிடையாது என்றால் சரியல்ல. என் கணவர் பயணம் செய்த TATA Ace வாகனத்தை ஓட்டியவரின் அஜாக்கிரதை, கவனக்குறைவு மற்றும் போக்குவரத்து விதிகளை மதிக்காமல் வாகனத்தை ஓட்டியது தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் ஈடுபட்ட மற்றொரு வாகனமான Bolero Pick up Van ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. அதுபோல அந்த வாகனத்திற்கு முறையான அனுமதி சான்று கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி Bolero வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் சரியாகத்தான் ஓட்டி வந்தார் என்றும் TATA Ace வாகன ஓட்டுநர் தான் சரியா ஓட்டாமல் விபத்தை ஏற்படுத்தினார் என்றும் சொல்வது சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றாலும் சரியல்ல. 5, 6 மனுதாரர்கள் என் கணவரை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பாலிசி விதிமுறைகளை 1ம் எதிர்மனுதாரர் மீறி உள்ளார் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள மனு திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் பயணம் செய்த TATA Ace வாகனத்தில் டிரைவர் மற்றும்

கிளினர் உள்பட 7 நபர்கள் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். என் கணவர் மேற்படி வாகனத்தில் பின் பகுதியில் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி TATA Ace வாகனம் சரக்கு வாகனம் என்றும், அது ஆட்களை ஏற்றிச் செல்லும் வாகனம் இல்லை என்றும், என் கணவர் அது தெரிந்தே சரக்கு வாகனத்தில் பயணம் செய்துள்ளார் என்றால் சரிதான். என் கணவர் பயணம் செய்த TATA Ace வாகனத்தின் எதிரே வந்த 1ம் எதிர்மனுதாரரின் Bolero வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல.

ம.வி. – இல்லை

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .